(ஔ) கடலூர் மாவட்டம், நீட் தேர்வு அச்சத்தால் மாணவி நிஷா உயிரிழந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன் அவர்கள்.*

திரு. ஆ. அருண்மொழிதேவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி. கடலூர் மாவட்டம், நெய்வேலி வட்டம் 9–ல் வசித்து வரும்* NLC *ஒப்பந்தத் தொழிலாளி உத்ராபதி என்பவரின் மகள் நிஷா,* NEET *தேர்வு எழுத நெய்வேலி இந்திரா நகரிலுள்ள ஒரு தனியார் பயிற்சி மையத்தில் படித்து வந்தார்.* NEET *தேர்வு பயம் காரணமாக 5–4–2023 அன்று மாலை 5–00 மணியளவில் வடலூர் இரயில்வே கேட் அருகில், பெங்களூரு–காரைக்கால் விரைவு இரயில் முன்பு பாய்ந்து அவர் தற்கொலை செய்து கொண்டார். இதுபோன்ற தற்கொலையைத் தடுப்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அந்த ஏழை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும். (குறுக்கீடு) பதிவு செய்துவிட்டீர்கள்.*

(அஅ) ஆணவக் கொலைகளைத் தடுக்க தனிச் சட்டம் இயற்றுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீப காலமாக அதிகரித்து வருகின்ற ஆணவக் கொலைகளைத் தடுக்கும் விதத்தில் தனிச் சட்டம் இயற்ற வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்.*

(அஆ) தேங்காய் மட்டை தொழிற்சாலை முடங்கிவரும் நிலை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள்.*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேங்காய் உரிக்கும் மட்டையைப் பயன்படுத்தும் தொழிற்சாலை தொழில் இப்போது முடங்கிக்*